(2025-26-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

SUBJECT CODE 25 UTM 102

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

பி. ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

முதலாம் பருவம் — நேரம் : 3 மணி

## பகுதி – 3

## அடிப்படைத்தமிழ்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. 'தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம்' - இந்நூலை எழுதியவர் …….
   அ) பொற்கோ ஆ) சுந்தரம் இ) சுப்பிரமணியன் ஈ) நன்னன்
2. சந்திப்பிழைக்குரிய எழுத்துக்கள் ……………
   அ) க் த் ப் ச் ஆ) ங் ம் ண் ன் இ) ர் ல் வ் ற் ஈ) ழ் ள் ந் ஞ்
3. நாங்கள் என்பதற்கு வரும் விகுதிப் பெயர் …………..
   அ) ஆய் ஆ) ஏன் இ) ஓம் ஈ) ஈர்கள்
4. புலனம் என்பதன் ஆங்கிலச் சொல் ………….
   அ) Whatsapp ஆ) Email இ) Internet ஈ) Website
5. விக்கிப்பீடியா தமிழில் தோன்றிய ஆண்டு …………….
   அ) 2001 ஆ) 2002 இ) 2003 ஈ) 2004

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. திறன் – வரையறு.
7. ‘COFFEE’ - என்பதன் தமிழாக்கம் யாது?
8. நிகழ்கால இடைநிலைகள் இரண்டினை எழுதுக.
9. Translator - விளக்கம் தருக
10. செயலிகள் என்றால் என்ன?

### பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. அ) நேர்காணல் நடத்தும் போது கவனிக்கப்பட வேண்டிய விதிகள் குறித்து எழுதுக

**(அல்லது)**

ஆ) இருவர் இடையே நடக்கும் கலந்துரையாடுதல் எவ்வாறு இருத்தல் வேண்டும்? விளக்குக

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. அ) மயங்கொலிப் பிழை என்றால் என்ன? தக்க சான்றுகளுடன் பொருத்திக் காட்டுக .

**(அல்லது)**

ஆ) நிறுத்தற் குறியீடுகளின் வகைகளை பட்டியலிட்டு எழுதுக.

13. அ) பெயர் வினைச் சொல்லுக்குரிய விகுதிகள் ஐந்தினைச் சான்றுடன் எழுதுக

**(அல்லது)**

ஆ) "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" - சீர் பிரித்து எழுதுக .

14. அ) 'கூகுள் ஐ போர்டு' மற்றும் 'கூகுள் லென்ஸ்' விளக்கம் தருக.

**(அல்லது)**

ஆ) மின்னணுக் கருவிகளில் தமிழ் எழுத்துக்களை எவ்வாறு உள்ளீடு செய்ய வேண்டும்? விளக்குக.

15. அ) பேசும் புத்தகங்கள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) விக்கிபீடியா குறித்து எழுதுக.

## பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K4 / K5)**

16. அ) பேசும் திறனை எவ்வாறு வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்? விளக்குக.

**(அல்லது)**

ஆ) தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் வகைகளை வரிசைப்படுத்தி எழுதுக.

17. அ) எழுதும் திறனில் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் யாவை? விவரிக்க.

**(அல்லது)**

ஆ) கட்டுரை எழுதும் போது கடைபிடிக்க வேண்டிய விதிகள் குறித்து தொகுத்து எழுதுக.

18. அ) மூன்று காலத்திற்குரிய இடைநிலைகளுக்கு விளக்கம் கொடுத்து, அவற்றைத் தக்க சான்றுடன் பொருத்திக் காட்டுக.

**(அல்லது)**

ஆ) வேற்றுமை உருபுகளை எழுதி, அவற்றைத் தக்க உதாரணத்துடன் பொருத்திக் காட்டுக.

19. அ) மின்னணுச் சீவிகளில் தமிழ் பயன்பாடு குறித்து விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கணினியின் பயன்பாடு குறித்து விவரித்து எழுதுக.

20. அ) தமிழ் தொடர்பான இணையத்தளங்கள் குறித்து கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) மின் நூல்களின் பயன்களைத் தொகுத்து உரைக்க.



**********************